# பெரியோர் ஓய்வுநாட் பள்ளிப் பாடங்கள்

**முதலாம் காலாண்டு, 2020**

## தானியேல்


**1** வாசிப்பிலிருந்து புரிந்துகொள்ளுதலுக்கு (டிச 28–ஜன 3) .................. **4**

**2** எருசலேமிலிருந்து பாபிலோனுக்கு (ஜன 4–10) .................. **14**

**3** மறைபொருளிலிருந்து வெளிப்பாட்டுக்கு (ஜன 11–17) .................. **24**

**4** அக்கினிச்சூளையிலிருந்து அரண்மனைக்கு (ஜன 18–24) .................. **34**

**5** அகந்தையிலிருந்து தாழ்மைக்கு (ஜன 25–31) .................. **44**

**6** ஆணவத்திலிருந்து அழிவுக்கு (பெப் 1–7) .................. **54**

**7** சிங்கக்கெபியிலிருந்து தூதனுடைய கெபிக்கு (பெப் 8–14) .................. **64**

**8** கொந்தளிக்கும் கடலிலிருந்து வானத்து மேகங்களுக்கு (பெப் 15–21) .................. **74**

**9** தீட்டிலிருந்து சுத்திகரிப்புக்கு (பெப் 22–28) .................. **84**

**10** பாவஅறிக்கையிலிருந்து ஆறுதலுக்கு (பெப் 29–மார்ச் 6) .................. **94**

**11** யுத்தத்திலிருந்து வெற்றிக்கு (மார்ச் 7–13) .................. **104**

**12** வட–தென் திசையிலிருந்து சிங்காரத் தேசத்துக்கு (மார்ச் 14–20) .................. **114**

**13** தூளிலிருந்து நட்சத்திரங்களுக்கு (மார்ச் 21–27) .................. **124**



பாட ஆசிரியர்

**எலியாஸ் பிரேசில் டி சவ்ஷா**

தமிழாக்கம்

மார்சல் ஐசக்



**தென்கிழக்கு இந்திய ஒன்றியம்**

**செவந்த்–டே அட்வென்ட்டிஸ்ட் திருச்சபை**

197, ஜீ. எஸ். டி. சாலை, வண்டலூர்,

**சென்னை – 600 048**

# தானியேல், முடிவு காலத் தீர்க்கதரிசி



இருபதாம் நூற்றாண்டு மலர்ந்ததுமே ஏதோ நல்ல காலம் பிறந்துவிட்டதாக மேற்கத்திய மக்கள் நினைத்தார்கள். அறிவியலும் தொழில்நுட்பமும் பொற்காலத்திற்கு வழியுண்டாக்கி, போரும் பஞ்சமும் பசியும் கொள்ளைநோயும் முடிவுக்கு வந்துவிட்டதாகக் கருதினார்கள். அப்படியொரு எதிர்பார்ப்பு நிலவியது.

ஆனால் அது தவறான, முட்டாள்தனமான, பொய்யான எதிர்பார்ப்பு என்பதை 20ம் நூற்றாண்டு நிரூபித்துவிட்டது. அதனால்தான் இருபத்தோராம் நூற்றாண்டுக்குள் காலடி வைத்தபோது, நல்லதொரு எதிர்காலம் குறித்த உணர்வு அதிகம் எழவில்லை.

உலகப்பிரகாரமாகப் பார்த்தால், நம்பிக்கையற்ற தோற்றமே மிஞ்சுகிறது; வளர்ச்சிக்கான அறிகுறி தென்படவில்லை. முற்காலத்தினர்போலவே இன்றும் மக்களிடம் பேராசை, அடக்குமுறை, வன்முறை, ஆக்கிரமிப்பு, அடிமைப்படுத்துதல், சுயஅழிவு போன்ற மனநிலைதான் அதிகம் காணப்படுகிறது. அதேபோல, மகத்தான தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளும் சிலசமயங்களில் மனிதர்களுக்கு உதவிக்கரமாக இருந்தாலும் பேராசைக்கும் அடக்குமுறைக்கும் வன்முறைக்கும் ஆக்கிரமிப்புக்கும் அடிமைப்படுத்தலுக்கும் சுயஅழிவுக்கும்தான் அதிகம் தீணிப்போட்டிருக்கின்றன.

“எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?” “ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்” என்று வசனங்களே சொல்லும்போது இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. எரேமியா 17:9; மத்தேயு 24:7.

இப்படிப்பட்ட நம்பிக்கையின்மையும் பேரழிவுகளும் நிலவுவதின்மத்தியில்தான் தானியேல் புத்தகம் கவனிக்கவைக்கிறது; இந்தக் காலாண்டின் நம்முடைய ஆராய்ச்சி புத்தகம்; குறிப்பாக, அய்ட் க்வாட்ஸில், ‘முடிவுகாலத்தில்’ (தானியேல் 12:9) வாழ்கிற நமக்கு மிகவும் பொருத்தமான புத்தகம். தேவனையும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவையும் சிலுவையில் அவர் மரித்ததையும் நாம் நம்புவதற்கும், அவருடைய வருகையின் வாக்குத்ததங்களையும் அதோடு சம்பந்தப்பட்ட அனைத்தையும் நாம் நம்புவதற்கும் பலமான, பகுத்தறிவான, நம்பிக்கையை உறுதிப்படுத்துகிற ஆதாரங்கள் அதன் பரிசுத்த பக்கங்களில் உள்ளன.

தானியேல் முழுவதிலும் (2,7,8,11 அதிகாரங்கள்) பாபிலோன், மேதிய-பெர்சியா,

கிரேக்கம், ரோம், இரண்டாம் வருகைக்கு பிறகான தேவனுடைய நித்திய ராஜ்யம் குறித்து வரிசையாகச் சொல்லப்பட்டுள்ளன. முன்னுரைக்கப்பட்டதுபோல அந்த ராஜ்யங்கள் எழும்பி, விழுந்ததையும் இப்போது நாம் காணமுடிகிறது. ரோம்மட்டும் எழுந்து, இந்நாள்வரைக்கும் இருக்கிறது; தானியேலில் சொல்லப்பட்டபடி நடந்துள்ளது. தானியேல் 2:33,41இல் சொல்லும் பாதமும் கால்விரல்களும் இதைக் குறிக்கின்றன. சொல்லப்பட்டபடியே ஐரோப்பிய தேசங்களும், ரோமத் திருச்சபையும் இன்றும் பிரிந்த நிலையில் உள்ளன. வேதாகமத் தீர்க்கதரிசனத்தின் உண்மைத் தன்மைக்கு இவை சாட்சி. வரலாறுதான் ஆதாரம். பாபிலோன் அல்லது கிரேக்கம் அல்லது ரோமின் ஆரம்பநாட்களில் வாழ்ந்தவர்களுக்கு இது புரிந்திருக்காது.

தீர்க்கதரிசன காலக்கட்டத்தில் நாம் வாழ்கிற பகுதியிலிருந்து பார்க்கும்போது, இந்த ராஜ்யங்கள்பற்றி தானியேல் சொல்வதெல்லாம் சரியென்பது தெரிகிறது; எனவே, இனி எஞ்சியிருக்கிற ஒன்றும் நிச்சயம் வந்தேதீரும். இரண்டாம் வருகைக்குப் பிறகான தேவனுடைய நித்திய ராஜ்யம்தான் அது.

வல்லமையான, விசுவாசத்தை உறுதிப்படுத்துகிற புத்தகம் தானியேல். குறிப்பாக செவந்த்-டே அட்வென்டிஸ்டுகள் போற்றுகிற புத்தகம். அட்வென்டிஸ்ட் திருச்சபைக்கான முக்கிய வசனங்கள் அடங்கியது. குறிப்பாக தானியேல் 8:14: “அவன் என்னை நோக்கி: இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும்வரைக்கும் இருக்கும், பின்பு பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும் என்றான்.” தானியேல் 8:14. இது. தானியேல் 7:22,26,27 வசனங்களுக்கு இணையான வசனம்: ‘உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்கு’ சாதகமாக பரலோகத்தின் தீர்ப்பு பிறந்ததும், தேவனுடைய நித்திய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுமென அந்த வசனங்கள் சொல்கின்றன. பூமியின் ராஜ்யங்கள், நிலையற்று ஒழிந்துபோயின. ஆனால் இந்த ராஜ்யமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்.

**தானியேல் புத்தகம், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பையும் குணத்தையும் வல்லமையாக வெளிப்படுத்துகிறது.**

இந்த ‘விசாலமான காட்சியின்’ ஊடே, தனிப்பட்ட விதத்தில் நம் ஒவ்வொருவரோடும் கிறிஸ்து எவ்வாறு நெருக்கமாக இருக்கமுடியும் என்பதையும் பார்க்கமுடிகிறது. நேபுகாத்நேச்சாரை கனவுமூலம் சந்தித்தார், தானியேலை சிங்கக்கெபியிலிருந்து விடுவித்தார். எனவே, தேவன் நமக்கு எவ்வளவு சமீபமாக இருக்கிறாரென அந்தப் புத்தகம் காட்டுகிறது. துன்மார்க்கனாயிருந்த பெல்ஷாத்சாரிடம் தானியேல் சொல்வதைப் பாருங்கள்: “தம்முடைய கையில் உமது சுவாசத்தை வைத்திருக்கிறவரும், உமது வழிகளுக்கு எல்லாம் அதிகாரியுமாகிய தேவன்.’ தானியேல் 5:23.

சுருக்கமாகச் சொன்னால், இந்தக் காலாண்டின் நம்முடைய ஆராய்ச்சி புத்தகமான தானியேல், ஆயிரக்கணக்கான வருடங்களுக்குமுன் எழுதப்பட்டபோது இருந்ததுபோலவே இன்றும் இருக்கிறது; அதாவது, நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பையும் குணத்தையும் வல்லமையாக வெளிப்படுத்துகிறது.

**எலியாஸ் பிரேசில் டி சவ்ஷா, செவந்த்-டே அட்வென்டிஸ்ட் ஜெனரல் கான்ஃபரன்ஸின் வேதாகம ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குனராகப் பணியாற்றுகிறார். பழைய ஏற்பாட்டு விளக்கவுரை மற்றும் இறையியல் பாடத்தில், ஆண்ட்ரூஸ் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர்.**